# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2112/43 - 2019 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2019.03.01

*2112/43 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 2018/18
காணி அமைச்சின் கு. இல.: 4-3/6/2 018/எச்டப்ளியு/20

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், கங்கபட பத்து சிறு பிரிவில், இல. 327 பீ வலகந்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், பஜ்ஜன்கலே கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2019.01.09 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மார 2765 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0962 ஹெக்டயார் இல் உள்ள ஒரு காணித்துண்டின் எல்லை (1 துண்டு):-

*01.* **துண்டு இல. 1**

காணியின் பெயர்: கஹலகொலமடித்த; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்பு பயிர்ச் செய்கை உள்ளது; உரிமை கோருவோர்: கொடிதுவகுகே பியதாஸ, "விஜய", கஹலகொலமடித்த, வலகந்த; ஆரம்ப உரிமை கோருவோர்: - (ஆ.வ. 230525 மற்றும் ஆ.வ. 230839 இன் பகுதிகள்); விஸ்தீரணம்: 0.0962 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 21.03.2019 ஆந் திகதி மு.ப.10.00 மணி கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 14.03.2019 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிந்தக்க அபேவிக்ரம,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
கிரிந்த புஹுல்வெல்ல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கிரிந்த புஹுல்வெல்ல.
2019, பெப்புருவரி 26.

03 - 812



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : தி/காணி/எல்2/சுவீ VI/152
காணி அமைச்சு குறிப்பு இல. : 4-3/6/2017/எச்டபிள்யு/372

10.01.2019 ஆந் திகதிய 2015/44 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பக்கம் 1ஏ யில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் திஹகொடை பிரதேச செயலாளர், உமேஷா சுராங்கி மாத்தரகே ஆகிய நான், காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் காணி எடுத்தல் விசாரணைத் திகதி 25.03.2019 மற்றும் வேண்டுகோளுக்கிணங்க சம்பந்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படும் திகதி 18.03.2019 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

உமேஷா சுராங்கி மாத்தரகே,
பிரதேச செயலாளர்,
திஹகொடை.

பிரதேச செயலகம்,
திஹகொடை,
2019, பெப்புருவரி 26.

03 - 813

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.